நாள் : 06–12–2018

# பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத் அவர்கள் இன்று (06–12–2018) காலை சென்னை மெட்ரோ இரயில் ஏஜி.டி.எம்.எஸ் மெட்ரோ இரயில் நிலையத்திற்கு நேரில்வந்து, புதிதாக திறக்கப்படவுள்ள ஏஜி.டி.எம்.எஸ் முதல் வண்ணாரப்பேட்டை வரையிலான (10 கி.மீ) சுரங்க வழித்தடப்பகுதியில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் வண்ணாரப்பேட்டை, உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெற்று வரும் இறுதிக்கட்ட கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டார். பணிகளைத் துரிதமாக முடிக்கும்படி அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

அப்போது, சோதனை ஓட்டத்திற்குத் தயாராக இருந்த மெட்ரோ இரயிலில் உள்ள வசதிகளையும் பார்வையிட்டார்.

இந்த ஆய்வின்போது, சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு. பங்கஜ் குமார் பன்சல், இ.ஆ.ப மற்றும் இயக்குநர் (திட்டங்கள்), இயக்குநர் (இயக்கம் மற்றும் அமைப்புகள்), தலைமைப் பொது மேலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தார்கள்.

அதன் பின்னர் ஏஜி.டி.எம்.எஸ் முதல் வண்ணாரப்பேட்டை வரை மெட்ரோ இரயிலின் சோதனை ஓட்டம் நடைபெற்றது. இந்த சோதனை ஓட்டம் தொடர்ந்து நடைபெறவுள்ளது.